அறிமுக நூல் – 8

# மதுரைக்காஞ்சி



இரா.இளங்குமரனார்



அறிமுக நூல் வரிசை – ௧

# மதுரைக் காஞ்சி

இரா. இளங்குமரன்

# அறிமுகத்திற்கு அறிமுகம்

தொடக்க நாளிலேயே ‘செந்தமிழ்’ எனப்பட்ட நம்மொழி, இப்பொழுது ‘செம்மொழி’ என்னும் சிறப்பை நடுவன் அரசால் அடைந்திருக்கிறது. அத்தகுதிக்குக் காரணமாக இருந்த நூல்களை எல்லாம் இளம்பருவ மாணவர்களும், ஓரளவே தமிழ்ப் பயிற்சியுடைய பெரியவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் ‘அறிமுகநூல்கள்’ வெளியிட வேண்டும் என்று அவாவினார், அன்புத் தோன்றல், செயல்வீறுமிக்க தன்மானத் தமிழர், புரட்சிக் கவிஞர் மன்ற நிறுவனர் தமிழ்த்திரு **பி.வரதராசனார்**. அவர் விருப்பை நிறைவேற்றும் வகையிலும், என் எண்ணப்பதிவும் அதில் ஒன்றியதாலும், தொடர்ந்து செம்மொழிக்கு உரியவும் பிறவகையால் தமிழ்வளமாவதுமாம் கலை வள நூல்களையும் அறிமுக நூல்களாக வெளியிட இசைந்தேன்.

அவ்வரிசையில் தொல்காப்பியம், திருக்குறள், திருமுருகாற்றுப்படை, பொருநர்ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி எனத் தொடர்கின்றன.

முன்னைத் தொல்காப்பிய, திருக்குறள் அறிமுக நூல்கள் பெற்ற வரவேற்பும், அவ்வெளியீட்டில் கண்ட விற்பனைப் பெருக்கமும், பருகுவார் போல் கேட்ட அவையச் சிறப்பும், பரப்புதல் உந்துதல் அவர்களுக்கு உண்டாகிய தமிழ்ப்பயனும், நூலாசிரியனுக்கும், வெளியீட்டினர்க்கும் பேருவகை ஆவதாம்! ‘தமிழ்மொழி’ ‘இனமீட்பர் பெருகுவர்’ என்னும் நம்பிக்கையைப் பெருக்குதல் நற்பேறாம். ஆதலால், இத்தொடர் தொய்வின்றித் தொடர்வதுடன், பெருக்கத் தொடராகச் சிறக்கத் தூண்டும் என்பதும் உறுதியாம்.

பரப்பாளர் என்பார், புரப்பாளருமாம் சிறப்பு வெளிப்பாடு இஃதாம்.

வாழிய நலனே!

வாழிய நிலனே!

இன்ப அன்புடன்,


27-7-2014

**இரா. இளங்குமரன்**

திருவள்ளுவர் தவச்சாலை,

அல்லூர், திருச்சி-620 101

## வெளியிட்டு மகிழும்





## புரட்சிக் கவிஞர் மன்றம்

75, வடக்குமாசி வீதி, மதுரை-1

அலைப்பேசி : 94437 10219

## அச்சிட்டு மகிழும்






# மணியம்மை

## மழலையர் தொடக்கப்பள்ளி

வடக்குமாசி வீதி, மதுரை-1

தொலைப்பேசி : 0452 2626111

# மதுரைக் காஞ்சி

**★ பத்துப்பாட்டின் வரிசையில் மதுரைக் காஞ்சியின் இடம் எது? அதன் அடி அளவென்ன?**

பத்துப்பாட்டின் வரிசையில் மதுரைக் காஞ்சி ஆறாவது ஆகும். அதன் அடி அளவு 782 ஆகும். பத்துப்பாட்டில் நெடிய பாட்டு அதுவே.

**★ மதுரைக் காஞ்சியைப் பாடியவர் பாடப்பட்டவர் எவர்?**

மதுரைக் காஞ்சியைப் பாடியவர், மாங்குடி மருதனார் என்பார். பாடப்பட்டவன், தலையாலங்கானத்துச் செருவென்றபாண்டியன் நெடுஞ்செழியன் என்பான்.

**★ 'மதுரைக் காஞ்சி' - பொருள் கூறுக.**

மதுரையின் சிறப்புக் கூறும் வகையால், காஞ்சி என்னும் புறத்திணையைக் கூறியது, மதுரைக் காஞ்சி எனப்பட்டதாம்.

**★ காஞ்சி என்பதன் இலக்கணம் என்ன?**

காஞ்சித் திணை பல வகையாலும் சிறப்புடையது; இணையில்லா மெய்யறிவு கூறுவது; இவ்வுலகின் நிலையாத் தன்மையை எடுத்துக் கூறி, என்றும் அழியா வாழ்வு பெற வலியுறுத்துவது. இதனை,

"பல்லாற் றானும் பாங்கரும் சிறப்பின்
நில்லா வாழ்க்கை புல்லிய நெறித்தே"

என்று தொல்காப்பியம் கூறுகிறது.

★ **காஞ்சியின் சிறப்பை விளக்கிக் கூறுக.**

உடலுக்கு மெய் என்பது பெயர்; ஆனால், அழிந்து போகும் இயல்பினது தான். எனினும், என்றும் அழியா வாழ்வு பெறுவதற்கு மூலமாக அமைந்தது இம் மெய்யுடலே யாகும். அது கொண்டே 'மெய்' என்றனர். மக்கள் வழக்கிலும் 'மேல்' என்றும், 'மேனி' என்றும் இவ்வுடல் வழங்கப்பட்டது.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத்தாம் மாய்ந் தனரே"

என்னும் புறப்பாடலும்,

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்"

என்னும் திருக்குறளும் எண்ணத் தக்கவை.

புகழ் உடம்பே சாவா உடம்பு! அவ்வுடம்பைச் சாவும் உடம்பு கொண்டே, அடைய வேண்டும். சாவும் உடம்பே சாவா உடம்பின் அடையாளச் சான்றாய் - ஓவியமாய் - சிற்பமாய் - சிலையாய்த் திகழ்கின்றமை அறிக.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்னும் திருக்குறளை எண்ணுக. நிலையாமையைக் கூறும் ஒப்பாரிப் பாடல் அன்று காஞ்சி. நிலையாமையைக் கூறுவதால் நிலைபெற்று வாழ ஏவும் சிறப்பினது அது.

★ **பாண்டிய வேந்தர் வழி வழிச் சிறப்பாக மதுரைக் காஞ்சி கூறுவன எவை?**

"காற்று இயங்கவும், நாள் மீன்கள் தத்தம் நிலையில் நின்று இயங்கவும், கதிரும் மதியும் விளங்கவும், பருவம் தவறாமல் மழை பொழியவும், விதைத்த ஒன்று ஆயிரமாய் விளையவும், மரங்கள் பயன் சிறக்கவும், நோய் இல்லாமல் மக்கள் வாழவும், திசையெல்லாம் இன்புறவும் கரவில்லா அமைச்சருடன் கலந்து, உலகாண்ட பெருமையர் பாண்டியர்" என்று அவர்கள் குடிப் பெருமையைக் கூறுகிறது மதுரைக் காஞ்சி.

★ **தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனை மருதனார் எவ்வெவ்வாறு விளிக்கிறார்?**

"பகை வெல்லும் படையுடையவனே,
பொதிய மலைத் தலைவனே,
சேர சோழ வேந்தர்களையும்
வேளிர்கள் ஐவரையும் வென்றவனே,
காட்டரண்களை அழித்தவனே,
வடிம்பலம்ப நின்றபாண்டியன் வழி வந்தவனே,
பகைவர்க்கு இடி அன்னவனே,
தென்குமரி வடவிமயம் மேல் கீழ்
கடலெல்லை அடிப்படுத்தவனே,
சாலியூர் முதுவெள்ளில் ஆயவற்றைவயப்படுத்தியவனே,
தலையாலங்கானத்தில் கள வேள்வி செய்தவனே,
பகைவர் நாட்டு அரணங்களை அழித்தவனே,
மாற்றார் காவல் மரங்களைச் சாய்த்தவனே,
நின் முன்னோர் ஆட்சி புரிந்தவாறு
அறநெறி தவறாமல் ஆட்சி புரிவாயாக"

எனப் பலவாறு விளித்து அறவுரை கூறுகிறார்.

★ **இவ்விளிப்பு வழியாக மருதனார் உணர்த்த விரும்புவதென்ன?**

"உன் ஒருவனால் அழிபட்டோரை எண்ணுக! வீரமிக்கவரும் வீழவில்லையா? ஆட்சி நடத்தியவரும் அழியவில்லையா? நாடுகள் காடாக வில்லையா? உன் வாழ்வுதான் அழியா வாழ்வா? அழியா வாழ்வாவது உன் முன்னோர் அறநெறி பிறழாது ஆட்சி புரிந்தவாறு நீயும் ஆட்சி செய்து அறங்காப்பதே" என்கிறார்.

**★ பாண்டியன் சிறப்பியலாகக் கூறியன எவை? வாழ்த்தியது என்ன?**

"வானகமே கையகத்து வருதாயினும் அதற்காகப் பொய் கூறாமல், மெய் கூறும் மேன்மையன். விண்ணும் மண்ணும் படையெடுத்து வரினும் அப்பகைகளுக்கு அஞ்சிப் பணியாதவன்; வாணன் என்பான் குவித்து வைத்த மணிக் குவியலே வருவதாயினும் பழிச் செயல் செய்ய விரும்பாதவன்; கொடை வழங்கும் புகழ் மிக்கவன்" என்கிறார். மேற்கே தோன்றும் பிறை நாளும் வளர்வது போலப் புகழ் சிறப்பாயாக; கிழக்கே தோன்றும் திங்கள் நாள்தோறும் குறைவது போல உன் பகைவர் புகழ் குறைவதாக எனப் பாண்டியன் புகழ் கூறி வாழ்த்துகிறார்.

**★ பாண்டிய நாட்டு நில வளம் பற்றி மாங்குடியார் கூறுவதென்ன?**

பாண்டிய நாட்டுக்குத் திரு வழுதி நாடென்பது பெயர். அது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நில வளங்களையும் உடையது என விரித்துரைக்கிறார்.

**★ மருத வளமாக மருதனார் கூறுவதென்ன?**

கீழ்கடல் நீரை முகந்த முகில், மேல் மலையில் குவிகிறது; குளிர்மழை பொழிகிறது; வெள்ளம் பாய்ந்தோடுகின்றது; யானை அஞ்சும்படி இடி இடித்து மழை பொழிதலால், அம்மழை ஆறு கால்களில் ஓடி ஏரி குளங்களை நிரப்புகிறது. யானை நின்றால் தெரியாத அளவு நெற்பயிர் வளர்ந்து விளைகிறது; பொய்கைகளில் மலர்கள் பெருகித் தோன்றுகின்றன. வலைஞர் மீன்களை வாரிக் கொண்டு வந்து விற்பனை செய்வர்; கரும்பாட்டும் ஆலைகளின் ஓசை எழும்; களை பறிப்பார் குரவையும் நகைப்பும் குலவும்; கள வேலை பார்ப்பார் ஆரவாரம் எழும்; திருப்பரங்குன்றத் திருக்கோயில் விழாச் சிறக்கும்; மகளிர் புதுநீரில் ஆடிப்பாடி மகிழ்வர்; பாணர்கள் இசை எழுப்புவர். இப்படி மருத வளம் சிறந்து விளங்கும் என்கிறார்.

**★ முல்லை வளமாக மாங்குடியார் கூறுவதென்ன?**

“முல்லைக்குப் பெயரும் ஒழுக்கமும் தந்த முல்லை, மணம் பரப்பி உதிர்ந்து கிடக்கும். முல்லை நிலப்பயிராம் வரகும் எள்ளும் விளையும்; தினை முதிர்தலால் அறுவடை நிகழும்; பள்ளங்களில் கிடக்கும் நீரில் குவளை முதலிய பூக்கள் பொலிவாகத் தோன்றும்” என்கிறார்.

**★ குறிஞ்சி வளமாகப் பாவலர் கூறுவதென்ன?**

குறிஞ்சியாம் மலைப்பகுதியில் 'ஐவனம்' என்னும் நெல்லும், தோரை என்னும் நெல்லும் விளையும். தினையைத் தின்ன வரும் கிளியை வெருட்டுவாரும், அவரையைத் தின்று அழிக்கும் ஆமாவை ஓட்டுவாரும், ஆண்பன்றியைப் பொறியில் மாட்டச் செய்தலால் உண்டாம் ஓசையும், வேங்கைப் பூவைப் பறிப்பார் அதன் விலங்குப் பெயரான 'புலிபுலி' என்று முழங்குவாரும், பன்றியை அடித்துக் கொல்லும் புலியின் முழக்கும் பலப்பல இடங்களில் இருந்தும் கேட்கும் இயற்கையது குறிஞ்சி வளம் என்கிறார்; இவ்வோசைகள் அனைத்தும் மலையில் பட்டு எதிரோசை செய்வதாம் ஓசையையும் சுட்டுகிறார்.

**★ பாலை நிலத் தன்மையாக ஆசிரியர் பகர்வதென்ன?**

மழைவளமற்ற பாலையில் தோன்றிய வறண்ட ஊகம் புல்லும் காய்ந்து போய்க் கிடக்கும்; சூறைக்காற்று வெப்புடன் வீசிக் குகைகளையும் வெதுப்பும்; குடிசையில் வாழ்வோரும் மான் தோலில் படுத்தவருமாகிய இளைய வீரர் வழிச் செல்வாரைக் கொள்ளையிடும் கொடுமையை ஒழிப்பதற்காக வில்லேந்திய கையராய்த் திரிவர் என்று பகர்கிறார்.

**★ நெய்தல் நிலம் பற்றிக் காஞ்சி கூறுவதென்ன?**

நெய்தல் நிலத்து வாழ்பவர் கடல் வழங்கிய பொருள்களாகிய முத்து, சங்கு முதலியவற்றைவிற்பர். அயல்நாட்டு வணிகர் தம் கலங்களில் வந்து குதிரை, மணப்பொருள், செய்கலம் முதலியவற்றை விற்றுக், கடல் உப்பு, இனிய புளி, மீன் வாட்டு முதலியவற்றை மாறுபொருளாக வாங்கிக் கொண்டு செல்வர் என்கிறது.

**★ மதுரைக் காஞ்சியில் மதுரை மாநகர்ச் சிறப்பாக அறிவன எவை?**

வளமான நிலங்கள் நிரம்பிய பாண்டிய நாட்டின் இடையே, திரு ஆலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் என்பவை கூடியமைந்த நான்மாடக் கூடலாய் மதுரை உள்ளது. அது நிலமகளின் எழில்முகம் அனையது. வையையின் கரையில் உள்ளது. உயர்ந்த மரங்களில் மந்திகள் தாவித் திரியும்; நீர் பெருகி வருதலால் மணல் குவிந்து குன்றுகளாகக் காட்சி தரும்; சோலைகள் சூழவும் அமைந்தது.

**★ நீராடும் துறைகளைப் பற்றிக் கூறுக.**

வையை நீராடும் துறைகளில் மலர்கள் மாலைபோல் செல்லும்; துறைகளின் பக்கங்களில் பாணர் குடியிருப்புகள் உண்டு; நகரைச் சூழ அகழி இருக்கும்; சுரங்க வழிகளை யுடைய மதில்கள் ஓங்கியிருக்கும்.

**★ நகர உட்பகுதி எத்தகையது?**

நகர உட்பகுதி மாட மாளிகைகளால் ஓங்கியது. முகில்கள் பரவித் தங்கியும் ஊர்ந்தும் செல்லும் மாண்பினது. மக்களும் கால்நடைகளும் இடையறாமல் செல்லுதலால் மதில் வாயில்கள் வையையாறெனத் தோன்றும்; வாயிலைக் கடந்தால் நீண்டு அகன்றதெருக்கள் உண்டு; தெருக்களும் வீடுகளும் ஆற்றையும் ஆற்றின் கரைகளையும் ஒப்பத் தோன்றும்.

**★ மதுரை வீதிச் சிறப்புகள் எவை?**

மதுரையின் வீதிகளில் பன்னாட்டவரும் திரிதலால் பலவகை மொழிகளும் பேசப்படும். நடைபெற இருக்கும் விழாக்களைப் பற்றிக் கூறிப் பறைகள் முழங்கும்; அதனைக் கேட்டு மக்கள் தெருக்களில் நின்று ஆடிப்பாடி மகிழ்வர்; அங்காடித் தெருக்களில் கோயில் விழாக்கள் குறித்த கொடிகள் விளங்கும்; பகைவென்ற கொடிகளும் பொலிவாக ஆடும்; மதுக் கடைகளின் கொடிகள் மல்கிக் கிடக்கும்; அருவியென எங்கும் கொடிகள் இவ்வாறு அசையும்.

★ **படைகளைப் பற்றி அறிவன எவை?**

கடலில் கடிய காற்று மோதலால் கலங்கள் நிறுத்திக் கட்டிய நங்கூரங்களை இழுத்து அறுத்துச் சுழலில் சுழலும். யானைப் படைகள் மதங் கொண்டு மரக்கலங்களைப் போலச் சுழலும்; பாகர்களின் கட்டுக்கு அடங்காமல் அவர்களைக் குத்திக் கொல்லும்; குத்துக் கோல்காரர் களையும் கொன்றழிக்கும்.

தேர்ப்படைகள் காற்றைக் கிழித்துக் கொண்டு வானத்தை மோதச் செல்வன போல் தாவிச் செல்லும்; அத்தோற்றம், வெள்ளையன்னம் விண்ணில் பறப்பது போல் விளங்கும். குதிரைகள் ஆட்டம் ஓட்டம் ஆயவை, கட்டில் நிற்க மாட்டாமல் நிகழும்; காலாட் படைகள் மது மயக்கத்தில் மயங்கி யானையென அசை நடை போடும். இப் படைகளின் செலவால் ஆங்காங்குப் பண்டங்களை விற்பார் தெருவில் உலவாமல் ஒதுங்கி நிற்பர்.

★ **பண்டம் விற்பவர் பற்றி அறிவன எவை?**

படைகளின் செலவும் ஆரவாரமும் அடங்கிய வேளை கண்டு, பண்டம் விற்பவர் தெருவில் உலாவுவர். அவர்கள் கையில் பெரிய பெரிய தட்டங்கள் இருக்கும். அது வீரர்களின் முன் கொட்டப்படும் மத்தளங்களின் கண்போல் இருக்கும். பூவினையும் சுண்ணப் பொருள்களையும் வெற்றிலை பாக்கு முதலியவற்றையும் விற்பாரும் தெருவில் திரிவர்.

★ **மதுரையில் அமைந்த அங்காடிப் பெண்கள் பற்றிக் கூறுக.**

அங்காடிப் பெண்கள் அழகிய தோற்றம் உடையவர்; பிறரை மயக்கும் ஒப்பனை செய்தவர்; இச்சை மிக்க இளைஞர்களை வயப்படுத்திக் களிப்பவர். முதிய பெண்டிர் வீடுதோறும் சென்று மணமிக்க பூவும், விரும்பி ஏற்கும் பொருள்களும் விற்பர்; கடல் நீர் கூடுதலும் குறைதலும் இல்லாமல் இருப்பதுபோல், வேண்டும் பண்டங்களும் கூடுதலும் குறைதலும் இல்லாமல் அங்காடித் தெருவில் வேண்டுமளவும் கிடைக்கும்.

★ **செல்வரும் மகளிரும் பற்றிக் காஞ்சி கூறுவதென்ன?**

செல்வச் செழிப்புடையவர்கள் பட்டுடுத்துப் பல்வேறு அணிகளை அணிந்து, வீரக் கழல் வேப்பமாலை மணிமாலை ஆயவை சூடித் தெருக்களில் செல்வர். காலாட் படை வீரர்களும் தேர்ப்படை வீரர்களும் உலாவுவர்; மாடத்து அரமியங்களில் உள்ள பலகணிகளின் வழியே அழகிய மகளிர் முகம் விளங்கும். ஆங்கு அசையும் கொடிகளால் வெளிப்பட்டும் வெளிப்படாமலும் முகில் மறைத்து அகலும் முழுமதிபோல் தோற்றம் தருவர்.

★ **மாலைப் பொழுதின் நகர விழாக்கோலம் எத்தகையது?**

மாலைப் பொழுதில், நறுமணமிக்க புனைவுகளையுடைய மகளிர், முழு முதல் இறைவனாம் சிவபெருமானையும் முருகனையும் திருமாலையும், பூக்களும் அவி உணவுகளும் கொண்டு சென்று வழிபடுவர்; முரசுகள் அறையப் பட்டுப் பொலிவுறும்; பௌத்தப் பள்ளிக்கு இளமகளிர் தம் குழந்தைகளை ஏந்திய கையராய்ச் செல்வர்; அவர்கள் கணவன்மாரும் வழிபாட்டுக்கு வேண்டும் பொருள்களொடும் உடன் செல்வர்.

★ **மதுரையின் சமய நிலை பற்றி அறிவதென்ன?**

மதுரையில் பல்வேறு சமயத்தவரும் உறைவர்.
வேதங்களை ஓதி இவ்வுலகிலேயே
வீட்டின்பம் பெறுவார் ஒருபால் உளர்;
உயர்ந்த மாளிகைகளில் கைகளில்
பூந்தட்டம் ஏந்திச் செல்லும்
அமண நோன்பிகள் ஒருபால் உளர்;

சமன் கோல் அன்ன நடுவுநிலை பேண வல்ல அறங்கூறு அவையம் ஒருபால் உண்டு.

அறிய வேண்டியவற்றையெல்லாம் அறிந்து ஆக்கமும் கேடும் தெளிந்து அரசன் செவ்வியில் ஆட்சி நடத்த வழிகாட்டும் காவிதி மக்கள் ஒருபால் இருப்பர். பன்னாடுகளில் இருந்தும் வந்து வாணிகம் செய்யும் வள வாழ்வினர் ஒருபால் உறைவர் என்று சமயச் சால்பும் பொதுமையும் மதுரையில் வாழ்வார் கொண்டுள்ளமையைக் காஞ்சியால் அறிகிறோம்.

**★ கோசர் என்பாரைப் பற்றி மாங்குடியார் என்ன கூறுகிறார்?**

மழை குறையாமல் பெய்வதும் விளைவு குறைவுபடாததும் ஆகிய நாட்டினர் கோசர் என்பார். தம் வாய்மொழி காக்கத் தவறாத வாழ்வினர்; வாள் வீரம் மிக்கவர்; உயர்வமைந்த அவையம் ஒன்றனைக் கொண்டவர்; அத்தகைமை அமைந்தவன் மோகூர் மன்னன் பழையன் மாறன் என்று சிறப்பிக்கும் வகையால் குறிப்பிடுகிறார் மாங்குடியார். மதுரை சார் ஒற்றைக் கடையை அடுத்தது மோகூர். அவன் புகழ்ப்பேறு கூறுவது பழையன் கோட்டையாம் இற்றைப் பாளையங்கோட்டை. கோசர் கொண்டது போல் வேள்வியர், படைத் தலைவர், தூதர், ஒற்றர் ஆயோரைக் கொண்டவன் பழையன் மாறன் என்னும் வகையால் சுட்டுகிறார்.

**★ மதுரையின் தொழில்வளம் வணிக வளம் ஆயவற்றின் இணைவை எவ்வாறு அறிகிறோம்.**

சங்கை அறுத்து வளையலாக்கும் தொழிலாளரும், பல்வகை மணிகளைக் கொணர்ந்து துளையிடுவாரும், பொற்பணி செய்யும் கலைத்திறத்தரும் உள்ளனர். ஆடை விற்பார், ஓவியம் தீட்டுவார், நெய் தொழில் செய்வார், இன்னும் பல பணி புரிவார், அவற்றைவாங்குவார் கூடியிருத்தலால் மாலைக் கடையாம் அந்திக் கடையில் கால் வைக்க இடமின்றி மக்கள் குவிகின்றனர்; அவர்கள் ஓசையும் ஒலியும் மிக்கிருக்கும். அவ் வாரவாரம் சேரவேந்தன் பேரவையில் அறிவின் மிக்கார் கூடி ஒருவரோடு ஒருவர் தருக்கம் செய்தலை ஒப்ப விளங்கும் என்கிறார்.

இன்றும் மதுரையில் அந்திக் கடைப்பொட்டல் எனப் பெயருடைய இடம் இருத்தலை அறியலாம். அந்திக்கடை மாலைப் பொழுதுக் கடையாம்.

**★ அறக் கூழ்ச் சாலை என்பது என்ன? அது பற்றி ஆசிரியர் கூறுவது என்ன?**

கூழ் என்பது உணவு. 'படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண்' என்னும் அரசுறுப்புகளுள் ஒன்று. 'அறக் கூழ்ச்சாலை' பாண்டியன் அதிவீர ராமனால் பாடப்படுகிறது வெற்றி வேற்கையில். தமிழகத்தில் இடையறாது திகழ்ந்து வந்த சான்று அது.

காசு இல்லாமல் உயரிய உணவு வகைகளை வழிப்போக்கர்க்கும் வறியவர்க்கும் வழங்கும் இடம் அஃதாம்.

அறக் கூழ்ச் சாலையில் வாழை, மா, பலா, முந்திரி முதலாம் பழ வகைகளும், பாகல் கத்தரி முதலிய காய்கறி உணவு வகைகளும் கண்டு சருக்கரையின் இனிய பாகடையும் இறைச்சிச் சோறும் பாலும் வழங்கப்படுதலைச் குறிப்பிடுகிறார்.

**★ வெளிநாட்டுப் பொருள்கள் மேல் மக்கள் கொண்ட ஆர்வத்தை ஆசிரியர் எவ்வாறு கூறுகிறார்?**

மரக் கலங்களில் கொண்டு வரப்பட்ட பொருள்களை வாங்க மக்கள் கடற்கரையில் பெருந்திரளாக நிற்பர். ஒருவர் முந்தி ஒருவர் அப்பொருளை எடுப்பதால் பேராரவாரம் உண்டாகும். பல்வகைப் பண்டங்களையும் கரையில் இறக்கும் ஓசை, தம் குஞ்சுகளுக்கு வேண்டும் இரையைத் தாய்ப்பறவை கவர்ந்து கொண்டு செல்வது போல் இருக்கும் என்கிறார்.

**★ மாலைப் பொழுதில் மகளிர் செயல்களாக ஆசிரியர் பாடுவதென்ன?**

மாலைப் பொழுதில் கதிர் மறைய, நிலவு தோன்றும். அப்பொழுது மகளிரே மகளிரை விரும்பத்தக்க அழகிய பெண்கள் ஒளி விளக்கு ஏற்றுவர்; தம் கணவரொடு கூடி மகிழ்வதற்கு நறுமணக் கலவை வகைகளைப் பூசுவர். உடுத்தும் மெல்லிய உடைக்கும் நறுமணப் புகை ஊட்டுவர்; இவ்வகைத்தாக மகளிர் செயல்கள் இருக்கும் எனப் பாடுகிறார்.

**★ பொதுமகளிர் பற்றி ஆசிரியர் புகல்வன எவை?**

"பொது மகளிர் பளிச்சிடும் விளக்கொளியில் மின்னுவர்; பலரும் ஒன்று கூடுவர்; மணல் தேரியின் மேல் ஏறி நின்று இன்னிசை யாழ் மீட்டுவர்; மத்தளம் கொட்டி அதற்குத் தக ஆடுவர்; மணமிக்க மாலைகளை உடுத்த உடையோடும் இணைத்திருப்பர்; தலையிலும் பூச்சூடுவர். உள் நாட்டவர் வெளிநாட்டவர் ஆயோரைக் கவர்ந்து ஆடிப்பாடிக் கூடித் தழுவி மகிழ்வர்; அன்புடையார் போல

விளங்குபவர்; தேனை எடுத்துக் கொண்டு வறிய பூவை மீளப் பாராமல் பறந்து போகும் வண்டு போல அகன்று சென்று விடுவர்; வீடு சென்று ஆங்கும் பொருளொடும் வந்தாரொடு கூடியிருப்பர்" என்கிறார்.

### ★ ஓணம் பண்டிகை பற்றி ஆசிரியர் உரைப்பதென்ன?

திருமாலின் பிறப்பு நாளாகக் கொள்ளப்பட்டுக் கொண்டாடப்படுவது திருவோணப் பண்டிகை ஆகும். அப்பண்டிகை அவுணராம் அசுரரைக் கொன்றநாளாகக் கொள்ளப் படுவதால் வீரர்கள் தம் போர் வெறி தீர ஒருவரொடு ஒருவர் மோதிக் கொள்வர்; காயம் பட்டுக் குருதி வழியக் காணப்படுவர். போர்ப் பயிற்சிக்காக யானைகளையும் மோத விடுவர்; அதனைப் பற்றநினைவார் நெருங்காமல் இருக்க நெருஞ்சி முள்ளைச் சிதறுவர்; அதற்கும் அஞ்சாராய்க்காலில் தைத்த முள்ளொடும் வீரர் திரிவர் என்கிறார். இப்பண்டைத் தமிழ் வழக்கு ஓணம் இற்றை மலையாளத்து வழக்காக உள்ளமை எண்ணத்தக்கது. சேரலம், கேரளமாய விளைவு இஃதாம்.

### ★ மகவு பெற்றமகளிர் இயல்புகளாக அறிவன எவை?

மகவு பெற்றமகளிர் பட்ட துயரெல்லாம் பனிபோல் தொலைந்து நன்மகவு பெற்றமகிழ்வில் இறையை நினைந்து வழிபட்டு நீராடுவர். கருக் கொண்டு மகவு பெறஇருக்கும் மகளிரும் துயரும் குறையும் இன்றி நன்மகவு வாய்க்குமாறு இறையை வேண்டுவர்; தம் உற்றார் உறவுகளுடன் தெய்வம் ஏறப் பெற்று ஆடிக் குறிசொல்லும் தேவராட்டியொடு யாழிசைத்தும் முழவு கொட்டியும் மயில் போல் மெல்லென நடந்து வழிபடுவர்; பாற்சோறு முதலாம் நல்லுணவும் மெல்லுணவும் உண்பர்; கார்நறும் குறிஞ்சியும் கடம்பும் சூடும் முருகனை வழிபட்டுக் குரவையாட்டம் ஆடுவர்; நன்னன் என்பான் கொண்டாடும் பிறந்த நாள் போல மகிழ்வு சிறக்க முதல்யாமம் கழியும்.

**★ நள்ளிருள் யாம நிலை எத்தகையது?**

மக்கள் நடமாட்டம் இல்லாமல் இருக்கும். சங்கு முதலிய இசைக் கருவிகள் இயக்கப்படா. மகளிர் உறங்குவர்; தெரு வணிகரும் அப்பொருள்களோடு அங்கேயே உறக்கம் கொள்வர். விழா நாளில் ஆடும் கூத்தரும் தம் கூத்து ஒழிந்து உறங்குவர்; பேய்கள் தெய்வங்கள் கூடி உலாவும் பொழுது அது என்கிறது காஞ்சி.

**★ நகர் காவலர் கடமையாற்றுதல் பற்றி அறிவன எவை?**

நகர் காவலர் அஞ்சாப் புலியனையவர்; துஞ்சாக் கண்ணினர்; கரவு களவு உடையவரைக் கண்ணால் கண்ட அளவால் நுண்ணிதின் நோக்கி அறியவல்ல தேர்ச்சியர்; ஏவும் அம்பு மாறாமல் தைக்கும்படி ஏவும் திறலர்; மழையே நீரே என்னாமல் காவல் வழுவாது செய்பவர்; யாம இருளிலும் இருக்கை கொள்ளாமல் இயங்குபவர்; கரிய நிறத்தர்; கரிய உடையர்; வாளேந்திய வலியினர், நூலேணியை, உடன் பயன் கொள்ளுமாறு தம் உடையுடன் சுற்றி வைத்திருப்பவர்; கண்மூடித் திறக்குமுன் மறையும் கள்வரையும் கண்ணிமைக்கும் பொழுதுக்குள் பற்றிப் பிடிப்பவர். இவ்வாறு காவலர் கடமை புரிதலால், ஊரே சிறு துயரும் அச்சமும் இன்றி அமைந்து உறங்கும்.

**★ விடியல் பொழுதில் மதுரையில் நிகழ்வனவாக அறிவன எவை?**

அகந் தண்ணியராம் அந்தணர் இறையிசை இசைப்பர்;
யானைப் பாகர் யானைக்குக் கவளம் ஊட்டுவர்;
குதிரைகள் வரிசையாக நின்று புல் தின்னும்;
பண்டம் விற்கும் வணிகர்
தம் கடைகளைத் தூய்மை செய்வர்;
கள் விற்பவர், தம் வணிகத்தைத் தொடங்கி விடுவர்;
தெருக்களில் வரிசையாக அமைந்த வீடுகளின்
கதவுகளைத் திறப்பதாலும் மூடுவதாலும் ஓசை உண்டாம்;
நின்று ஏத்துவாரும் இருந்து ஏத்துவாரும்

ஆகிய சூதரும் மாகதரும் ஏத்தி வாழ்த்துவர்; வேதாளிகர் என்னும் இசைவல்லார் பள்ளி எழுச்சிப் பண் இசைப்பர். பொழுதுகாண் நாழிகைக் கணக்கர் பொழுது இது எனச் சொல்வர்; பள்ளி எழுச்சி முரசு, பொழுதறிந்து முழங்கும்;

காலை வரவை அறிவிக்கச் சேவல் கூவும்;

கூட்டில் மாட்டப்பட்ட காட்டு விலங்குகள் முழங்கும்;

யானையும் பிடியும் பிளிறும்;

பகைவர் கொண்டிருந்த யானை, குதிரை, பசுத்திரள், பொற்குவை அணிகலம் முதலியவை அரண்மனையை அடைய வந்து கொண்டிருக்கும். இவ்வாறு மதுரையை அடையும் பொருள்கள், கங்கைப் பேரியாறு கடலிடைப் புகுவது போலப் பொலிவாக விளங்கும்.

**★ அரசன் பள்ளி எழுச்சி கொண்டு செய்வன எவை?**

இரவுப் பொழுதிலே பள்ளியறைசென்றமன்னவன் பாண்டியன் இனிது கண்ணயர்வான்; அன்று செய்ய வேண்டும் அறச் செயலையும், பொருட் செயலையும் வைகறைப் போதிலே சிந்தித்து எழுவான். காலைக் கடன்களை முறையே முடிப்பான். மார்பில் மாலையும் கையில் வீரவளையும் விரலில் ஆழியும் அணிவான். உயரிய தூய உடைகளை உடுப்பான். உரிய அணிகலங்களைப் பூண்பான். திருவோலக்க மண்டபத்துக்கு வந்து வீற்றிருப்பான். அவனால் விருது அளிக்கப்பட்ட ஏனாதி காவிதி எட்டி முதலியோர் அவன் பெருமை கூறி வாழ்த்துவர்.

**★ திருவோலக்கத்தில் இருந்து அரசன் செய்வன எவை?**

நாட்டுக்காகப் போரிட்ட வீரர்களுக்கும், புலமையில் ஓங்கிய சான்றோர்க்கும், ஆடல், பாடல் கலைகளில் வல்ல பாணர் கூத்தர் முதலோர்க்கும் வேண்டும் பரிசுகளை வழங்குவான். குடிமக்களுக்கும் குறைகேட்டு நிறைசெய்வான். அதனால் மக்கள் அனைவருமே மகிழ ஆட்சி புரிவான்.

**★ காஞ்சிப் பொருளாகக் காஞ்சிப் புலவர் வலியுறுத்துவன எவை?**

ஆட்சி புரிந்த முடியுடைய மன்னர் எத்துணையர்?
வண்மை சிறக்க வாழ்ந்த கொடை வல்லார் எத்துணையர்?
பகைவர் அரண்களை வென்று அடிப்படுத்திய
வீறுமிக்கவர் எத்துணையர்?
பிறவேந்தர் பணிந் தொழுகப் பெருவேந்தாகத்
திகழ்ந்தவர் எத்துணையர்?
எவரும் இணையில்லார் என ஆற்றலொடு
விளக்கியவர் எத்துணையர்?
பிறந்தார் எவரும் இறந்தொழிதல் உறுதி
என்பதன் படி இறந்தவரை
எண்ணின் கடல் மணல் அளவுதானும் ஒப்பது ஆகுமா?
நீயும் அவ்வாறு வாளா ஒழிந்து படவா பிறந்தாய்?
என்ன கூறுவேன்?
பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல
வியப்பும் சால்பும் செம்மையும் சான்றோர்
பலர்வாய்ப் புகரறு சிறப்பில் தோன்றி" (760-765)
உனக்கென அமைந்த காலமெலாம் இனிதாக வாழ்வாயாக

என எடுத்துக் கூறவிரும்பிய பொருளைக் கூறி நிறைவு செய்கிறார்!

பல்சாலை முதுகுடுமி என்பான், பல்யாக சாலை முதுகுடுமிப் பெரு வழுதி என்பவன். வேள்வி செய்தலே வாழ்வாகக் கொண்டவன்!

நிலந்தரு திருவிற் பாண்டியன் என்பான், தொல்காப்பிய அரங்கேற்றம் செய்தவன்! அவர்களைப் போல் அழியாப் புகழ் செய்து நிலைபெறுவாயாக என்கிறார்.

தமிழரைப் பழித்த வடவேந்தரை வென்று கனகவிசயர் தலையில் இமயக் கல்லை ஏற்றிக் கங்கையில் நீராட்டி வேலான் குன்றில் கண்ணகியார்க்குக் கோட்டம் எடுத்த வேந்தன் சேரன் செங்குட்டுவன் அவன் உடன் பிறந்த தம்பியார் இளங்கோவடிகளாராலேயே,

மாடல மறையோன் சொற்கேட்டு,

"வேள்விச் சாலையுள் வேந்தன் புகுந்தான்"

என்று நூலை முடித்தது எண்ணத் தக்கது!

*** மாங்குடி மருதனார் திறம் என்ன?**

மாங்குடி மருதனார் எந்த வேந்தனுக்குக் காஞ்சித் திணையை வற்புறுத்த வேண்டும் என்று எண்ணினாரோ, அவன் வாழ்ந்த மதுரையையே பாடு பொருளாக்கிக் கொண்டார். மதுரையை ஆட்சி செய்த பாண்டிய மன்னர்களின் பெருமையை விரித்துப் பலபடக் கூறினார். அவ்வேந்தருள் சிறந்தோர் இருவரை எடுத்துக் காட்டினார். எண்ணிலார் பெயர் தானும் அறியப் பெறாமல் போயதையும் சுட்டினார். வேள்வி பல செய்த முதுகுடுமிப் பெருவழுதியையும், நான் மறைமுற்றிய அதங்கோட்டாசானைத் தலைவனாகக் கொண்ட அவையத்தை உடையானையும் போல வாழ்க என வாழ்த்தினார்! மறைவேள்வி செய்தலும், மறைவல்லார்க் குதவலும் அவர் சொற்படி நடத்தலும் நிலைபேறாம் என்பதை நன்கு வலியுறுத்தினார்! அவ்வகையில் அவர் தம் கருது கோளில் வெற்றி கொண்டார் என்பதாம்.

*** மாங்குடி மருதனார் தமிழ்நாட்டையன்றி வடநாட்டையும், பிறநாட்டு வேந்தர்களையும் தக்காங்கு எடுத்துக் காட்ட வல்லார் என்பதைத் தெளிவாக்குக.**

மருதனார், வட விமயம், கங்கையாறு முதலியவற்றைக் காட்டுதலால் வடநாடும் அறிந்தவர் என்பது தெளிவாம். தருமனைக் காட்டலும் கருதத்தக்கதே. 'கோசர்' என்பாரையும் 'வாணன்' 'நன்னன்' முதலோரைக் காட்டுதலும் அவர்தம் பரந்த வரலாற்றுத் திறத்தைக் காட்டும்.

**★ மருதனார் இசை நாட்டத்தர் என்பதை எவ்வாறு அறியலாம்?**

எடுத்துக் கொண்ட பாடல் அகவல் எனினும், வஞ்சி அடிகளிலே தொடங்கி அவ்வடிகளைப் பெரிதும் இடை இடைப் பயன்படுத்துதலால் பொருளுக்கு ஏற்ப இசையைப் போற்றி அமைப்பவர் மருதனார் என்பது புலப்படும். பண்கள், இசைக் கருவிகள் பலவற்றைச் சுட்டலாலும் விளக்கமாம்.

**★ மருதனார் கூறும் காவலர் கடமை வழியாக நமக்கு மதுரைக்காஞ்சி என்ன கூறுகிறது?**

மருதனார் கூறும் காவலர் தகவு அப்படியே வாய்த்த காவலராகவரின் நாட்டின் அவலம் கொள்ளை, கொலை வஞ்சம் முதலியன உலவுமா? அவர் காட்டும் காவலர் உருவாகாமல் தடையாக இருப்பவர் எவர்? என்பவற்றை எண்ண வைக்கிறார் அல்லவா!

**★ இவர் பாடிய பிறபாடல்கள் எவை?**

இவர் பாடியனவாக நற்றிணை குறுந்தொகை அகநானூறு புறநானூறு ஆகிய தொகை நூல்களில் பதின் மூன்று பாடல்கள் உள.

நன்கொடை ரூ.20 ஆக்கம் : பெரியார்

அறிமுக நூல் – 8

# மதுரைக்காஞ்சி



இரா.இளங்குமரனார்



ஆக்கம்: பெரியார்